## ஒதுக்கீட்டுத் தலைப்பு – 176 – சிவில் விமான சேவைகள் அமைச்சு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குஇலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்டோபர் 23 ஆம் திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய

உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், சிவில் விமான சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு இதன் (அ) இல் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 1.4 முதல் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) ஓதுகீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவினம்

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 14,915,440,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இதில் ரூபா 14,879,067,497 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்பு ரூபா 36,372,503 தொகையாகியிருந்ததுடன் இது மொத்தத் தேறிய ஏற்பாட்டில் 0.24 சதவீதமாகக் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவின விபரம் | மதிப்பிடப்பட்ட ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டெழுபவை | 86,715,000 | 86,140,000 | 77,884,891 | 8,255,109 | 9.58 |
| மூலதனம் | 12,006,550,000 | 14,829,300,000 | 14,801,182,606 | 28,117,394 | 0.18 |
| மொத்தம் | 12,093,265,000 | 14,915,440,000 | 14,879,067,497 | 36,372,503 | |

### (ii) பாதீட்டு முரண்கள்

* 176-2-3-2302 செலவின விடயத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகையான மொத்த மூலதன ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

* ரூபா 51,625,000 கூட்டுத்தொகையான 16 செலவின விடயங்களின் ஏற்பாடுகளில் ரூபா 20,534,635 தொகை பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 31,090,365 தொகை எஞ்சியிருந்தது. இது அச் செலவின விடயங்களிற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 14 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது. செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை இச் சேமிப்பு ஏற்படக் காரணமாகியிருந்தது.

(iii) பாதீட்டு உதவிச் சேவைகள் அவசர தேவைகள் பொறுப்பின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள்

பாதீட்டு உதவிச் சேவைகள் அவசர தேவைகள் பொறுப்புச் செயற்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 25,000,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 655,239 ஆன அதாவது 2.62 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

17601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 2,000,000 | 1,309,350 | 1,600,000 | 1,940,595 | 11,900,000 | 8,900,626 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 127,521 தொகையான நிலுவை சம்பளக் கடன் முற்பணங்கள் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவின் பிரகாரம்

உத்தியோகத்தரின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்படாது மாதாந்தம் ரூபா 1,500 படி அறவிடப்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் ரூபா 103,521 தொகை அறவிடப்படுவதற்கு எஞ்சியிருந்தது.

(ii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 ஆம் 4.5 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு முரணாக சேவையை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 376,426 தொகை இரு ஆண்டுகளுக்கும் மேலான காலமாக அறவிடப்பட முடியாதிருந்தது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுச் செயலாளர்கள், மாகாண சபை தலைமைச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைத் தலைவர்களுக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்குறிப்பிடப்பட்ட 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல்

அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக 2013 யூன் 03 ஆம் திகதியே அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

## 1.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டின் போது அரச சேவைக்கு உரித்தற்ற அமைச்சுப் பதவியணிக்குரிய இரு உத்தியோகத்தர்கள் சீனாவில் நடைபெற்ற கண்காட்சியில் கலந்துகொண்டமைக்காக ரூபா 391,637 தொகையான அமையப் படிப்பணமும் ரூபா 12,600 தொகையான வீசாக்கட்டணமும் அமைச்சால் ஏற்கப்பட்டிருந்தது.

## 1.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 02 | 02 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 42 | 30 | 12 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 21 | 18 | 03 |
| (v) | ஏனைய | 02 | 02 | -- |
| | மொத்தம் | 70 | 55 | 15 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இரண்டாம் மட்டத்திலும் ஆரம்ப மட்டத்திலும் நிலவிய 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.